விலை சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 மார்கழி 21 றவி அவ் 8 இதழ் 324
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 5-1-82

நாதன் அன் கோ
எல்லா ரக உயர் தர
ஓடுகளிற்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
நாதன் அன் கோ
68, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
நெட்டிவிப்பாய், கோண்டாவில்.
(1808)

## எகிப்தின் புதிய அமைச்சரவை பதவியேற்றது

கெய்ரோ, ஜன. 4

எகிப்தில் பிரதமர் டாக்டர் முஹதீன் தலைமையிலான 30 பேர் கொண்ட புதிய அமைச்சரவை இன்று பதவியேற்றது.

அமைச்சரவையில் 5 துணைப் பிரதமமந்திரிகளும் இடம் பெற்றுள்ளனர். [வெ[

★ பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு:

# உபாலி இயக்குநர்கள் ராஜினமா

## ஜனாதிபதியிடம் கடிதங்கள் இன்று சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

**பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் மா அதிபர் திரு. உபாலி விஜேவர்த்தன தமது பதவியை ராஜினமா செய்துள்ளார். இவருடன் ஆணைக்குழு இயக்குநர்களும் ராஜினமா செய்துள்ளனர். ராஜினமா கடிதங்கள் இன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும்.**

சொந்தக் காரணங்களை முன்னிட்டே தாம் ராஜினமா செய்வதாக திரு. உபாலி விஜேவர்த்தன நேற்று தெரிவித்தார்.

ஆணைக்குழு நேற்றுக் கூடி ராஜினமா பற்றி ஆராய்ந்து முடிவு செய்தது.

ஆணைக்குழு இயக்குநர்களை ராஜினமா செய்யுமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னர் கேட்டிருந்தது தெரிந்ததே.

புதிய மா அதிபராக திரு. போல்பெரேரா நியமிக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு. உபாலி தவிர்ந்த இப்போதிருக்கும் இயக்குநர்கள் மீண்டும் நியமிக்கப்படுவார்கள் என்று அறியப்படுகிறது. திரு. உபாலி அரசியலில் பிரவேசிக்கின்றார்.

சிவசண்முகமூர்த்தியின்

## மரணவிசாரணை இன்று நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சிவசண்முகமூர்த்தியின் மரண விசாரணை யாழ். நீதிமன்றத்தில் இன்று நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி எஸ். சரவணபவானந்த இறந்தவனின் பிரேத பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்ற அச்சுக்கூடத்தின் மனேஜரும், இறந்தவரின் தந்தையும் இன்று சாட்சியமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, [மா]

## இறந்தவரின் உடலில் ஐந்து சன்னங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள அச்சுக்கூடத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவரின் சடலம் பிரேத பரிசோதனைசெய்யப்பட்டபோது, உடலிலிருந்து ஐந்து சன்னங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் துப்பாக்கியால் சுடப்பட்ட இடத்திலிருந்து மூன்று சன்னங்கள் எடுக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை காலை பத்தரை மணியளவில் யாழ். நகரில் மணிக்கூண்டு வீதியில் உள்ள அச்சகம் ஒன்றில், சதாசிவம் சிவசண்முகமூர்த்தி (வயது 29) என்ற இளைஞர் 'புதிய பாதை' என்ற பத்திரிகை அச்சிடுவது குறித்து அச்சக மனேஜருடன் உரையாடிக் கொண்டிருந்தபொழுது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானது தெரிந்ததே,

இவரின் உடலில் இடது பக்கக் கழுத்து, தலை, மூளை, நெஞ்சு, முகம் ஆகியவற்றில் எட்டுக் காயங்கள் இருந்ததாகவும் தெரியவருகிறது. [மா]

யாழ். ப. நோ, கூ.சங்க

## ஊழியர் வேலைநிறுத்தம் தொடருகிறது

### உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவும் முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

யாழ் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தம் மேற்கொண்டனர்.

வேலைநிறுத்தம் சம்பந்தமாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ் மனோகரன் நேற்று பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் தங்களது கோரிக்கைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைக்கு அழைக்க நிர்வாகம் தவறிவிட்டது என்றும், வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதுடன், தீர்வு எதுவும் காணப்படாதபட்சத்தில் நாளை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''யாழ் ப. நோ. கூ. சங்க முகாமை எம்முடன் உடன்பட்டுக்கொண்ட பல கோரிக்கைகளை தொடர்ச்சியாகப் புறக்கணித்துவருவதாலும். நாம் அவர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தைக்காக எடுத்த முயற்சிகளை அவர்கள் கௌரவிக்க தவறியமையினாலும், சங்கத்தில் இடம்பெற்றுவரும் ஊழல்களை நாம் சுட்டிக்காட்டியபோதும் அவர்கள் அது விஷயமாக மௌனம் சாதித்து வருவதாலும் எமது தொழிற் சங்க செயலாளர் அநீதியான முறையில் வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளதாலும் நல்லூர் கல்யாண மண்டபத்தில் திரு, எஸ். எஸ்.மனோகரன் தலைமையில் கடந்த ஞாயிறுக்கிழமை நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத் தீர்மானப்படி நேற்று அடையாளவேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. வேலை நிறுத்தத்தில் நாம் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது முகாமை மேற்கொண்ட புகாரின்பேரில் ஊழியர்கள் பொலிசாரினால் கலைந்து செல்லுமாறு பணிக்கப்பட்டார்கள். எனினும், தனியார்

[6ம் பக்கம் பார்க்க]

## காரணம் காட்டாதவர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவர்

### இயக்குநர்சபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ப. நோ, கூ. சங்க ஊழியர்களில் வேலைக்கு வராதவர்கள் எழுத்துமூலம் தகுந்த காரணம் தரும் பட்சத்தில் அவர்களை வேலைக்கு எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படும்என்று யாழ். ப. நோ. கூ. சங்க இயக்குநர்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர்சபைத் தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் ப. நோ, கூ. ச. காரியாலயத்தில் இக் கூட்டம் நேற்று பிற்பகல் நடை

(6ம் பக்கம் பார்க்க)

# விதைகிழங்கு விநியோகம்: தில்லுமுல்லு!

## யாழ். அபிவிருத்திசபை உறுப்பினர் கண்டனம்!

[யாழ்ப்பாணம்[

யாழ். செயலகத்தில் நடைபெற்ற காணி, நீர்ப்பாசன, விவசாய, கமத்தொழில் திணைக்களங்களின் மகாநாட்டில் உரையாற்றிய யாழ், மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு.சின்னத்துரை விதை உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்பட்ட முறையைக் காரசாரமாகக் கண்டித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நிறைவேற்றுக் குழு உறுப்பினர் திரு.சி.நாகராசா தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்துவும் கலந்துகொண்டார்.

விதை உருளைக்கிழங்கு விநியோகத்தில் விவசாயப் பணிப்பாளரும், திணைக்களத்தினரும் நடந்துகொண்ட முறை பிழையானது என்று தெரிவித்த திரு. க. சின்னத்துரை விதை உருளைக்கிழங்கிற்கு முற்பணம் செலுத்தியவர்களுக்கு மூன்றிலொரு பகுதி விதைகிழங்கு வழங்கப்படாமல் இருக்கும்பொழுது 1980ல் முற்பணம் செலுத்தி விதை கிழங்கு பெறுமல் இருந்தவர்களுக்கு அப்பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு விதை கிழங்கு கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானித்து, 40 பெட்டி விதை கிழங்குகளும் ஒருவருக்கே வழங்கப்பட்டுள்ளது என்று கண்டித்துப் பேசினர்.

அத்தனை விதை கிழங்குகளையும் எடுத்தவர் மேலதிக விலைக்கு விற்றுள்ளாரென்றும், இதற்கு விவசாயத் திணைக்களத்தினர் உடந்தையாக இருந்தனரென்றும் குற்றஞ்சுமத்திய திரு. சின்னத்துரை இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக விவசாயப் பணிப்

(6-ம் பக்கம்பார்க்க)

அரிய சந்தர்ப்பம்
டிப்ளோமா கம்ப்யூட்டர் புரோகிறமிங்
3-வது பிரிவு
ஆரம்பம்: 10—01—1982
O/L அல்லது N. C. G. E. சித்தியடைந்தவர்கள் சேரலாம்.
09—01—1982 முன்பாக விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்று விண்ணப்பிக்கவேண்டும். நேரில் வரவும்.
நாஷனல் அக்கடமி,
(அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)
11, மொம்சாக் கட்டிடம், ஸ்டான்லி றோட்,
யாழ்ப்பாணம். (1899)

**மணிவாக்கு**

ஏகாந்தத்தில் பண்ணப்படும் சாதனையின் மூலம் மனமெனும் பாலின்றும் ஞானம், பக்தி ஆகிறவெண்ணெயைக் கடைந்தெடுப்பாயாக. அது உலக மாகிற நீரில் கலந்துபோய்விடாது. உலகமாகிற நீரிலே மனமானது தனியாக மிதந்து நிற்கும்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்.

# நமது நோக்கு

## குழந்தை வியாபாரம்

குடும்பக்கட்டுப்பாடு பற்றிப் பிரசாரம்செய்யும் இக்காலத்தில் அதிக குழந்தைகள் தேவையற்ற உயிரினங்கள் என்ற கருத்தும் கலந்திருக்குமோவென்று அஞ்சவேண்டியிருக்கின்றது.

குடும்பநலத் தேவைக்கு அதிகமான குழந்தைகள் வேண்டாப் பண்டங்கள் என்றும், விலைகூறி விற்கும் பொருட்கள் என்றும் நினைக்குமளவிற்கு இன்றையகாலகட்டத்தில் மனப்போக்கு மாறிவருகின்றது. குழந்தைகள் அடகுப் பொருட்களாகவும் பாவிக்கப்படுகின்றன.

முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் தாயை 'கைப்புரத்திலேந்திக் கனகமுலை தந்தவள்' என்கின்றார். பவுணின் விலை ஏறும் இறங்கும் வகை தெரியாத புலவர்களே 'கனகமுலை' என்றபதத்தின் அர்த்தம் புரியாது திணறுகின்றனர்.

கற்றுமனமெனக் கதறியும் பதறியும்' என்றொரு அடியில் மாணிக்கவாசக சுவாமிகள் கன்றைவிட்ட தாயின் மனத்தை படம்பிடித்திருக்கிறார்.

தாய்—பிள்ளை என்ற மகத்துவ தொடர்பு இவ்வாறிருக்க இன்று எமது நாட்டில் பெருந்தொகை பிள்ளைகள் விற்பனையாகி ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

விலைகொடுத்து வாங்கும் ஐரோப்பிய நாட்டு மக்கள் அங்கு இக்குழந்தைகளை ஏலத்தில் விற்பனை செய்வதாகவும் உறுதியான தகவல்கள் கிடைத்திருக்கின்றன; பயங்கரமான தகவல்கள்—ஒன்றுக்கு மூன்று லட்சம்!

மனைவியையும் பிள்ளையையும் காசி மாநகரில் ஏலத்தில் விற்ற அரிச்சந்திரன் செயல் சத்தியத்தைக் கடைப்பிடிக்க நிகழ்த்திய வீரச்செயல்! பேசும் படம் பார்க்க நேரமில்லாத மகாத்மா காந்தி பார்த்த ஒரே ஒரு படம் 'அரிச்சந்திரன்'. அதில் சோகச் சுவை நிரம்பியகாட்சி மனைவியையும் மகனையும் ஏலத்தில் விற்ற காட்சி.

அந்த ஏலவிற்பனையும் இன்று இலங்கைக் குழந்தைகள் நாகரிகம் படைத்த ஐரோப்பாவில் விற்கப்படும் வியாபாரக்காட்சியும் இன்றைய உலகின் அதமாஅதம நிலையை முரண்பாட்டு முறையில் விளக்குகின்றன.

ஒற்றுமை காணவேண்டின் அன்று ஆபிரிக்காவிலிருந்து கப்பல் கப்பலாய் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நீக்ரோ அடிமைகளைக் குறிப்பிடலாம்; நூற்றுண்டுகள் கழிந்தும் கறுப்பர்களை அந்த வடு இன்னும் விட்டுப்போகவில்லை. நாம் மீண்டும் இன்னொருவகையில் ஒல்லாந்தருக்கு அடிமைகளாகப் போகிறோமா?

எனவே. சுவீகாரம் என்ற அடிப்படையில் இந்நாட்டுக் குழந்தைகள் வெளிநாடுகளில் ஏலவிற்பனைக்குள்ளாவதையும் இந்த வியாபாரத்தை ஒழுங்குபடுத்திப் பொருள் தேடும் தரகரையும் இனங்கண்டு கண்காணிப்பது அரசின் அவசர கடமை.

குழந்தைகள் பராமரிப்புக்குரிய அமைச்சு சட்டமூலம் கடும் நடவடிக்கைகள் எடுப்பதுடன், வறுமை காரணமாக, அநாதைகள் என்ற ரீதியில் கதியற்ற இக்குழந்தைச் செல்வங்களுக்கு தக்க புகலிடம் அளிக்கக் கடமைப்பட்டது.

நாட்டின் பண்பாட்டுக்கும் பாரம்பரியத்துக்கும் இழுக்கான இவ் இழிதொழிலை வேருடன் கிள்ளிவிடப் பிரசாரம் தீவிரமாக்கவேண்டும்.

## நாட்டின் இன்னொரு சாதனை

விவசாய இரசாயன பொருட்களின் நச்சுத்தன்மையால் ஏற்படும் மரணம் இலங்கைக்கு முதலிடம் தேடிக் கொடுத்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.

முதலிடத்தை வகித்து வந்தலத்தின் அமெரிக்காவை இலங்கை இன்று முந்திவிட்டது.

நாட்டின் சுகாதார இலாகாவுக்கு மட்டுமல்ல, விவசாய ஆராச்சித்துறைக்கும் ஒரு பேரிடியாக இந்தவிபரம் இருந்து வருகிறது.

கிருமிநாசினியா அல்லது மனித நாசினியா என்று டாக்டர்கள் ஆராயத்தக்க வசதிகள் கிடைப்பதில்லை. மரணம் நிகழ்ந்த பின்னரே நன்கு அறிமுகப்படுத்தப்படாத மருந்துகளின் உள்ளுடனை ஆராயவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

நாமிங்கு குறிப்பிடுவது கிருமிநாசினிகளால் ஏற்படும் தற்கொலைகள் பற்றியல்ல; அவ்விடயம்வேறொரு தலையங்கத்துக்குரியது!

கமக்காரர் தோட்டங்களிலும் வயல்களிலும் உபயோகிக்கும் கிருமிநாசினி, களைகொல்லி, பூச்சிக்கொல்லி ஆட்கொல்லியாக ஆண்டவனுடைய அழித்தல் தொழிலில் ஈடுபடுவது பற்றியே!

இந்த அபாயம் யாழ்ப்பாணக் கமக்காரர்களுக்கு பெருமளவில் உண்டென்று விவசாயத்திணைக்கள ஆய்வு குறிப்பிடுகின்றது. மருந்து தெளிக்கும்போது உடம்பு பாதுகாப்பற்ற நிலை—கூடிய விளைச்சலென்ற பேராசையால் செறிவுகூடிய மருந்தின் உபயோகம்—இவ்வித காரணங்களால் பலர் உயிரிழக்கநேரிடுகின்றது.

விவசாய திணைக்கள ஆராய்ச்சியின் பெறுபேறு இன்று இவ்வித கிருமிநாசினிகள் தேவைப்படாத பயிரினங்களை விவசாயிகளுக்கு வழங்கும் நிலைக்கு கிட்டவைக்கின்றது.

எதுஎவ்வாறாயினும் கிருமிநாசினிகளின் பாவனையை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகள் தேவை.

### ஆர்த்ரா தரிசனமும் விஞ்ஞானமும்

# சிதம்பரத்தில் நாம் காணும் நடராஜர் மணிவாசகரின் சிந்தையில் உதித்ததுதான்

(முன் தொடர்ச்சி)

அண்ணாந்து பார்த்து நமக்குத் தெரியும் சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள், வெள்ளிகள் எல்லாம் ஒரே நிரையாக நிற்கின்றன என்று நாம் கருதக்கூடும். அது தவறு. சூரியன் 25 நாட்களுக்கு ஒருமுறை சுழல்கிறது. பூமி 24 மணித்தியலாத்துக்கு ஒரு முறை சுழல்கிறது. சுழன்று கொண்டு ஒரு வருஷத்துக்கு ஒருமுறை சூரியனைச்சுற்றிவருகிறது. சந்திரன் 27.3 நாட்களுக்கு ஒருமுறை சுழல்கிறது. அதே நாட்களுக்கு ஒருமுறை பூமியைச் சுற்றுகிறது. வியாழன் பத்து மணித்தியாலத்திற்கு ஒருமுறை சுழல்கிறது. 12 வருஷங்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிவருகிறது. புதன் 58 1/2 நாட்களுக்கு ஒருமுறை சுழல்கிறது, 88 நாட்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிவருகிறது. சுக்கிரன் 244 நாட்களுக்கு ஒருமுறை சுழல்கிறது. 225 நாட்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது. சந்திரனுக்குப்போல சுக்கிரனுக்கும் கலைகள் தேய்ந்துவளரும். செவ்வாய் தானும் சுழன்றுகொண்டு இரண்டுவருடத்துக்குஒருமுறை சூரியனைச் சுற்றிவருகிறது. இதேபோல சூரியனின் ஏனைய குடும்பத்தவர்களான சனி, நெப்றியூன், யுரேனஸ், புளூற்றோ கிரகங்களும் தாங்களும் சுழன்றுகொண்டு சூரியனையும் சுற்றிவருகின்றன.

நமது சூரியன் பாலாடை எண்டத் தொகுதியின் மையத்தில் இல்லை. மைத்திலிருந்து விளிம்பு வரையிலுள்ள தூரத்தில் மூன்றில் இரண்டு பகுதி தூரத்தில் இருக்கிறது. இரவிலே நமது கண்ணுக்குத் தெரியும் வெள்ளிகள் எல்லாம் நமது சூரியனின் அயலில் இருக்கும் சூரியன்கள். இவையெல்லாம் சேர்ந்து நொடி (Second) ஒன்று 150 மைல் வேகத்தில் மையத்தைச் சுற்றி சுழன்று வருகின்றன. ஒருமுறை சுற்றிவருவதற்கு 20 கோடி வருஷங்கள் எடுக்கிறது. இந்தக் கால எல்லையை விஞ்ஞானிகள் 'ஒரு ஊழிஆண்டு' (Cosmic Year) என்று அழைக்கிறார்கள். நமது சூரியனுக்கு வயது 500 கோடி வருஷம் என்று மதிப்பிடப்படுகிறது. ஆகையால் இதுவரையில் 25 முறை மட்டுந்தான் மையத்தைச் சுற்றி வந்திருக்கிறது.

**வ. நவரத்தினம்**

நமது அண்டத் தொகுதிக்குப் புறத்தே கோடா கோடி அண்டத்தொகுதிகள்இருக்கின்றன என்று வான சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும்வெவ்வேறு அளவானவை. சராசரிபத்துலட்சம்ஒளியாண்டு தூரமுள்ள இடைவெளிக்கு ஒவ்வொன்றாக இருக்கின்றன. அண்டத்தொகுதிகளில் உள்ள வெள்ளிகள் சுழல்வதுபோலவே அண்டத்தொகுதிகளும் சுழல்கின்றன. எல்லாம் எங்கேயோ மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒன்றுமே நிலையில் நிற்கவில்லை.

நமது சூரியனின் தன்மையைத் தெரிந்துகொண்டால் கோடாகோடி அண்டத்தொகுதிகளில் இருக்கும் வெள்ளிகளாகிய சூரியன்களின் தன்மையையும் எல்லாவற்றையும் திரட்டினால்இருக்கக்கூடிய தன்மையையும் கற்பனை செய்வதற்கு உதவிபுரியும்.

நமது சூரியன் ஒரு பிரமாண்டமான எரியும் வாயுப் (hot gas) பிழம்பு, அந்த நெருப்புப் பேழையின் விட்டம் எட்டு லட்சத்து அறுபத்து

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாசகருக்கு விழா எடுத்துப்

# பெருமை பெற்ற காரை. மணிவாசகர் சபை

— க. வைத்தீசுவரக் குருக்கள் —

மண்ணுலகத்தோர்ஞான வானுலகத்துக்கு ஏற ஏணிபோ லவிளங்கும், சிறப்புகள் பொருந்திய ஞான நூலாம் திருவாசகத்தை மக்கள் எல்லோரும் உணர்ந்து அனுபவிப்பதற்கு உதவும் நோக்கமாகக் காரைநகர் அன்பர்கள் சிலரால் 1—1—40இல் மணிவாசகர்சபை ஆரம்பிக்கப்பட்டது. 15 ஆண்டுகள் வரை சபையானது திருவாசக வகுப்புக்களை நடத்தியும் சொற்பொழிவுகளை நிகழ்த்துவித்தும் சிறியஅளவில்தொண்டாற்றி வந்தது. 1955ஆம் ஆண்டு தொடக்கம் சபையின் தொண்டுகள் விரிவடையத் தொடங்கின. அந்த ஆண்டு திருவெம்பாவைக் காலத்தில், ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் விழாவைச்சபையினர் 5 நாட்கள் நடத்தினர். மகா வித்துவான் சி. கணேசையர் நந்திக்கொடியை ஏற்றிவைத்து ஆசி வழங்கினார். அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் விழாவை ஆரம்பித்து வைத்தார். ஈழத்தில் முதன் முதல் மணிவாசகப் பெருமானுக்கு விழா எடுத்தபெருமை இச்சபையையே சாரும்.

இவ்விழா காரணமாக மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. திருவாசகம் அவர்கள் மனத்தில் ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டது. எனவே விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் மகா வித்துவான் ச. தண்டபாணிதேசிகர், டாக்டர் சொ. சிங்காரவேலன், புலவர் சி. குழந்தையம்மாள், சைவப்பெரியார் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், வித்துவான் வீர. சிவசுப்பிரமணியம், வித்துவான் கு. சுந்தரமூர்த்தி, வித்துவான் இரா. செல்வக்கணபதி முதலான தமிழகஅறிஞர்களும் விழாவிற் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்கு அழைக்கப்பட்டனர். விழாவிற் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றாத ஈழத்து அறிஞர்கள் இல்லையென்றே கூறலாம்.

இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. இ. கனகசுந்தரம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம், வைத்தியகலாநிதிகளான கு. தண்டாயுதபாணி, ந. குணரத்தினம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா முதலான அறிஞர்கள் தலைவராகவும், செயலாளராகவுமிருந்து பெருந்தொண்டாற்றிய சிறப்பும் இச்சபைக்கு உண்டு.

சபையானது ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்களைக் கொண்டு திருவெம்பாவைக்கும் திருப்பள்ளியெழுச்சிக்கும் உரை எழுதுவித்து அச்சிட்டு அடக்க விலைக்கு விற்பனைசெய்தது; மணிவாசகர்விழாவையொட்டி மூன்று மலர்களையும் வெளியிட்டது; டாக்டர் கொ. சிங்காரவேலன் இயற்றிய 'கதிர்காமசதகம்' என்னும் நூலையும் வெளியிட்டது; அருட்கவி சீ. விநாசித்தம்பியினால் பாடப்பெற்ற பக்திப்பாடல்கள் பலவற்றை அச்சிட்டு

(5ம் பக்கம் பார்க்க)

### திருவெம்பாவை சிந்தனை – 6

# கேவலாவத்தை நீங்கிற்று

உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவள் வேறு யாருமல்லள். அவள் கேவல அவத்தையிற் கிடந்த ஆன்மாவேதான். ஆணவத்தோடு கிடந்த ஆன்மாவைத் திருவருளோடு சேர்ப்பதற்கு நீராடுதல் தொழுதல் முதலிய நியமங்களாயுள்ளன. ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம்பெறும் பொருட்டேயாம்'' என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்தின் முதற்பாடத்தின் முதல் வசனம். இரண்டாம் வகுப்பிற்கு இப்படி எழுதிய நாவலரவர்கள் பெரிய வகுப்பிற்கு எப்படி எழுதியிருப்பாரென்று மாளவியா வியந்தாராம்.

**க. சி. குலரத்தினம்**

இறைவனை அத்தன் என்றும் ஆனந்தன்என்றும் பக்தர்கள் கூறி வழிபட்டனர். இறைவன் நாம் பிறவியெடுப்பதற்கு நியமித்த காரணனாய், திரோதான சக்தியைக் கொண்டு போகங்களை ஊட்டி, மல நீக்கஞ் செய்து ஆன்மவளர்ச்சிக்கு உபகரிப்பவர், உறுதுணையானவர். அவர் இன்பவடிவானவர், எனவே ஆனந்தன். அவர் ஒருவரே ஆண்பாலானவர். மற்றையஆன்மகோடிகள் எல்லாம் பெண்பாலானவர்கள். ஆன்மாக்களுக்குப்பேரிபச் சுகமளிப்பவர் இறைவன். அவர் சுகத்தைச் செய்பவராகலின் சங்கரன் எனத்திருநாமம் பெற்றவர்.

பாவை நோன்பு இந்து நாகரிக வாழ்வில் தெற்கிலும் வடக்கிலும் எங்கும் வியாபகமுற்றுச் சிறப்பிடம் வகித்துவந்தது. சங்க காலத்துத் தமிழர் வாழ்வில் மார்கழி நீராடலும் மகத்தான நோன்பும் தைநீராடல் எனவே வழங்கிவந்தது. ''தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ'' என்று கலித்தொகையிலும், ''நறுவீயைம்பான் மகளிராடும் தையித் தண்கயம்'' என்று ஐங்குறுநூறிலும் தொடர்கள் வருகின்றன. மழைவளம் சுரக்கவும் நாடு செழிக்கவும் மகளிர் நோற்றனர் என்பர். ''மழை பல பெய்க, நாடு வளஞ் சுரக்க'' என்பது மகளிரின் கோரிக்கையாகும். நாடு செழிக்க வாழ்வும் மலர மங்கையர் தங்களுக்கு நல்ல கணவனையே விரும்பினர் என்பர்.

(5ம் பக்கம் பார்க்க)

குகதாசனின் மரணம் தொடர்பான

# தமிழ்க் கடிதத்துக்கு சிங்களத்தில் பதில்

(பண்டத்தரிப்பு)

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் எம்பிலிப்பிட்டியாவில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது மரணமான தமது மகன் குகதாசனின் மரணம் பற்றி விசாரணை நடத்திய மாஜிஸ்திரேட் கொலை என்று தீர்ப்பு வழங்கியிருந்தபோதிலும் இது பற்றி இதுவரை மேல்விசாரணை எதுவும் நடத்தப்படவில்லையென்றும், விசாரணையை தாமதமின்றிநடத்துவதற்கு ஆவன செய்யுமாறும் மாதகலைச் சேர்ந்த சமாதான நீதவான் திரு. வி. நவரத்தினராசா பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு தமிழ் மொழியில் அனுப்பிய கடிதத்திற்கு பிரதமர் அலுவலகத்திலிருந்து சிங்களத்தில் பதில் கடிதம் கிடைத்துள்ளது.

இவரது கடிதம் நீதியமைச்சுக்கு நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப் பட்டிருப்பதாகவும், நீதி அமைச்சு இது பற்றி விரைவில் மேல் நடவடிக்கை எடுக்குமென்றும் பிரதமர் திரு. நவரத்தினராசாவுக்கு அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் இது பற்றி பிரதமருககு திரு, நவரத்தினராசா தமிழ்மொழியில் தமது மகனின் மரணம் பற்றிமேல் விசாரணை நடாத்தப்படாதது குறித்து கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பினர். பிரதமர் அக்கடிதத்தை கைத்தொழில் அமைச்சின் நடவடிக்கைக்காக அனுப்பிவைத்திருப்பதாகவும்,கைத்தொழில் அமைச்சு இது பற்றி நடவடிக்கை எடுக்குமென்றும் திரு. நவரத்தினராசாவுக்கு சிங்கள மொழியில் பதில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார். திரு. நவரத்தினராசா அக்கடிதத்தை பிரதமருக்கு திருப்பி அனுப்பி கைத்தொழில் அமைச்சுதான் தனது மகனது மரணத்துக்குப் பொறுப்பு என்றும் கைத்தொழில் அமைச்சு இது பற்றி நடவடிக்கை எடுப்பதை தாம் விரும்பவில்லையென்றும் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்தையும் திரு. நவரத்தினராசா தமிழ்மொழியில் பிரதமருக்கு எழுதியிருந்தார்.

பிரதமரிடமிருந்து தமக்குக் கிடைத்த மேற்படி இரு சிங்களக் கடிதங்களையும் எதிர்க்கட்சித் தலைவருக்கு தாம் அனுப்பி வைத்திருப்பதாக இது பற்றி தகவல் தருகையில் திரு. நவரத்தினராசா நமது நிருபரிடம் தெரிவித்தார்.




# அந்நியச் செலாவணி மோசடியில் இரு அதிகாரிகள்!

(கொழும்பு)

அந்நியச்செலாவணிமோசடி சம்பந்தமாக ஒரு வர்த்தக வங்கியைச் சேர்ந்தஅதிகாரியொருவரும், பிரபல சுற்றுலா நிறுவனமொன்றைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவரும், இரகசியப் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நீண்டகாலமாக அந்நியசெலாவணி மோசடியில் ஈடுபட்டிருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கோட்டை பதில் நீதவான் முன்னிலையில் இருவரும் ஆஜர் செய்யப்பட்டபோது, நீதிபதி இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து விசாரணைகளை ஒத்தி வைத்துள்ளார். (கி)

# ரூ 28,000 நகைத் திருட்டு: காங்கேசனில் சம்பவம்

(மாவிட்டபுரம்)

வீட்டுக்காரர் நித்திரையிலிருக்க யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள், 28 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பொருட்கள் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர்.

காங்கேசன்துறை குமார கோவில் வீதியைச் சேர்ந்த செல்லையா குருமூர்த்தி என்பவரது வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இவரும் மனைவியும் வீட்டினுள் நித்திரையிலிருந்த சமயம் யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து காப்பு, சங்கிலி,மோதிரம், நெக்லஸ், சேட்டுகள், சாரங்கள், காற்சட்டைகள் போன்ற 28 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச்சென்றதுடன் வீட்டின் கதவையும் திறக்கமுடியாதபடி கயிற்ருல் கட்டிவிட்டு சென்றனராம். அதிகாலை வீட்டுக் காரர் எழுந்து பார்த்த போது கதவு கயிற்ருல் கட்டப்பட்டிருந்ததுடன் உடமைகளும் திருடப்பட்டிருந்ததாம்.

இதுபற்றி காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளதையடுத்து பொலிசார் புலன்விசாரணை மேற்சொண்டுள்ளனர்.

# 'தொண்டர்களையே மக்கள் மதிப்பார்கள்'

(மண்டைதீவு)

''மண்டைதீவுக் கிராமம்பல துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்கு இப்பகுதியில் சமூகத் தொண்டர்களின் சேவையே காரணம். அமரர் சி. தனஞ்செயன் மண்டைதீவுக்கிராமத்திற்கு ஆற்றிய சேவைகள் என்றும் மறைந்து விடாது'' என்று மண்டைதீவு கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபைத்தலைவரும் சமூக சேவையாளருமான திரு. தனஞ்செயனின் மறைவையொட்டி மண்டைதீவு கிழக்கில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மண்டைதீவு முன்ஞள் கிராமத் தலைவர் திரு. மு. நவரத்தினராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஒருவரைப் பணத்திஞலோ பதவியிஞலோ அல்லது அந்தஸ்திஞலோ. உயர்ந்தவஞக மக்கள் மதிக்கமாட்டார்கள் என்றும் சிறந்த சமூகத் தொண்டனுக்கே மக்கள் மதிப்புக்கிடைக்கும் என்றும் சொன்ஞர்.

மண்டைதீவுதெற்குக்கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. எஸ். தில்லைநாதன் திரு. வி. சோமசுந்தரம் திரு. நா. இராமச்சந்திரன் ஆகியோர் உட்பட வேறுபலரும் பேசிஞர்சள். (அ)

# ஆஸ்திரேலியப் பிரஜை திடீர் மரணம்! சடலம் கொழும்பு விரைந்தது

(மாவிட்டபுரம்)

பொழுதுபோக்குவதற்காக யாழ்ப்பாணம் வந்த ஆஸ்திரேலிய பிரஜை ஒருவர் திடீர் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

58 வயதுடைய திரு. டக்ளஸ் வில்சன் றெபேட் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

கொழும்பிலுள்ள ஒரு ஸ்தாபனத்தில் இயக்குனராகவிருந்த இவர், விடுமுறையைக் கழிக்க யாழ்ப்பாணம் வந்திருந்தார். அச்சுவேலியில் ஒரு வீட்டில் தங்கியிருந்த இவர் திடீரென மயக்கமுற்று மரணத்தைத் தழுவிக்கொண்டதாக விசாரணையில் தெரியவந்தது. காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் எஸ். சுந்தரநாதன் இது குறித்து விசாரணை மேற்கொண்டிருந்தார்.

சடலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

# நச்சு இரசாயன ஆயுதங்கள் உபயோகச் செய்திக்குமறுப்பு

நியூயோர்ச், ஜன. 4

ஆப்கானிஸ்தானிலும் இந்தோசீஞவிலும் நச்சு ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் சோவியத் யூனியன் சம்பந்தப்பட்டுள்ளதாக அமெரிக்க நிர்வாகம் பரப்பிவரும் பொய்க் குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்தும்கடிதத்தை ஐ. நா. தலைமையகத்தில் உள்ள சோவியத் யூனியனின் நிரந்தரப் பிரதிநிதி இங்கு விநியோகித்தார்.

நச்சு ரசாயன, இதர வாயுக்களை யுத்தத்தில் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் 1925ம் ஆண்டின ஜெனீவா உடன்பாட்டையும் 1972ன் ஒப்பந்தத்தையம் சோவியத் யூனியன் மீறிவருகிறது என்ற குற்றச்சாட்டு அண்மைக்காலமாக அமெரிக்காவிலும் மேற்கு நாடுகளிலூம் பரப்பப்பட்டு வருகிறது.

'இககுற்றச் சாட்டுக்கள் யாவும் ஆதாரமற்றவை, பொய்யானவை' என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுகோஷ்டியின் தலைவர் இத்தகைய சம்பவம் எதுவும் பேஷ்வாரில் (பாகிஸ்தான்) இடம்பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். செஞ்சிலுவைச் சங்க டாக்டர்கள் எவரும் ரசாயன நச்சு ஆயுதங்களிஞல் பாதிக்கப்பட்டவர்கள் எவருக்கும் சிகிச்சை அளித்ததில்லை என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. நிபுணர்கள் குழு ஒன்று, இக்குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று ஆராய்ந்து வெளியிட்ட கருத்தில், நஞ்சு ரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டனவா இல்லையா என்பது குறித்து இறுதி முடிவுக்கு வரமுடியவில்லை. ஏனெனில், இத்தகைய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமைக்கான தடயங்கள் எதையும் காண முடியவில்லை' என்று தெரிவித்துள்ளது.

# பக்திரியையாளரிடையே மோதல் ஏழு பேர் பலி

திரிப்பொலி, ஜன. 4

கடந்த சனிக்கிழமை இரவு வடக்கு லெபஞன் நகரமான திரிப்பொலியில் நடந்த மோதல் ஒன்றில் ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

பக்கிரியையாளர்களுக்கிடையிலேயே மேற்படி மோதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் லெபஞனில் நடைபெற்ற மோதல்களின் போது 2100 பேர் கொல்லப்பட்டதாக பாதுகாப்புப் படைகள் அறிவித்துள்ளன. (கி)

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(சுண்டிக்குளி)

நத்தார் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு யாழ். நகரில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள வாகன, சன நெருக்கடிகளைப் பயன்படுத்தி பல சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்சனர்.

யாழ். நகரில் தமது சைக்கிள்களைப் பறிகொடுத்த பலர் தினமும் யாழ். பொலிசிற்குச் சென்று முறைப்பாடுசெய்து வருகின்றனர். (க)

# பிறப்புப் பத்திரம் பெறுவதில் சிரமம்

(மட்டக்கயப்பு)

மட்டக்களப்புக் கச்சேரியில் பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கும் பிரிவில் இயங்கிவந்த போட்டோஸ்ரட் இயந்திரம் பழுதடைந்த நிலையில் தொடர்ந்து காணப்படுவதால் கடவுச்சீட்டு, அவசரகால சான்றிதழ் பெறுவதற்காகப் பிறப்பு இறப்பு சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகப் பொதுமக்கள் மத்தியில் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது.

படுவான்கரை. வாகரை, வெல்லாவெளி, புல்லுமலை, மண்டூர் போன்ற தூர இடங்களில் இருந்துவரும் கிராமவாசிகள்ஏமாற்றத்துடன்தான் திரும்புகிருர்கள்.

# பொலிஸ் பொறுப்பதிகாரி: தற்காலிக வேலை நீக்கம்

(நானுஓயா)

நானுஓயா ரயில் நிலையப் பொதிகள் பகுதிக்குப்பொறுப்பான அதிபரைத் தாக்கியதாக நானுஓயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது குற்றஞ் சாட்டி முறைப்பாடு செய்ததையடுத்துமேற்படிபொலிஸ் அதிகாரி தற்காலிக வேலை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலையடுத்து மேற்படி நிலையஅதிபர் முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்குசிகிச்சை பெற்றுவருவதுடன், வேருெரு ரயில்வே ஊழியரும் சிகிச்சைக்குள்ளாகியுள்ளார்.

தாக்குதல் இடம்பெற்ற நாளன்று புகையிரத சேவை இரண்டுமணிநேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இச்சம்பவம் நடந்தவேளை சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி மது போதையில் நின்ருரெனத் தெரிவிக்கப்பட்டது. இது பற்றிய விசாரணைகளை நுவரெலியா உதவிப் பொலிஸ் அதிபர் மேற்கொண்டு வருகின்ருர். (கி)

வெலிஸி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
காமினி - ஸ்ரீப்பிரியா
நீலக்கடலின் ஓரத்திலே

4 வது-மகளிர் வாரம்
ஹரன யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

Regal Cinema
FROM 4 TO 6
D ily 10—30, 2—15, 4—30, 7—30, 9—30
Michael Douglas in COMA
FROM 7th
NOT NOW DARLING

லிடோ யாழ். நகர்
தினசரி 10.30, 2.15, 4.45, 7.15, 9.30
The Swarm

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30,9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்) தினசரி 10—30, 2—15, 4—15, 7—15, 9—45
இரத்தத்தை உறையவைக்கும் பயங்கர சம்பவங்கள் மர்மங்கள் நிறைந்த படம்
Carrie (ஆங்கிலம்)

வின்சர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர் ... ராதிகா
நிறம் மாருத பூக்கள்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:00, 4:30, 7:00, 9:30
யாழ். நகர்
கொழும்பில் 75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிப்படப்
10
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

இன்று 110 ஆவது வெற்றித்தினம்!
சாந்தி (யாழ். நகர்) தினசரி 10—30, 2—30, 6—15, 9—45
தொலைபேசி;7642
ஜனத்திரள் மத்தியில் 100 நாட்களுக்குமேல் பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது
கமல்—ஸ்ரீதேவி—முத்துராமன் மேஜர்— நடித்த
குரு (ஈஸ்ட்மன் கலர்)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 21 ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(5—1—82)

மேடம்: கண்துடைப்புவேலை நடைபெறும், வீட்டில் சிறிய பூசல் தலைதூக்கலாம், எந்த விடயத்திலும் நன்ருக ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும், ஆணவத்தை அடக்கவும்

இடபம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், கற்றதால் பயனுமுண்டு, களஸ்திரவழியால் மகிழ்ச்சி ஏற்படும், இன்று பொன்னுன தினம்.

மிதுனம்: குறைகேட்க நேரிடும், கடமையில் தடை தோன்றும், நஷ்டத்திற்கு இடம் உண்டு, நாவடக்கம் நன்று, உடல் நலிவு தோன்றும், பிணிக்கு இடம் கொடாது நடக்கவும்.

கடகம்: மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், மாதுருவழியால் தன வரவிற்கும் இடமுண்டு, வாகனச் சாரதிகள் அதிக பயன் அடைவர், டாக்டர்கள் வாழ்க்கை பிரகாசமாகவிருக்கும், சுபதினம்.

சிங்கம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக உணவு கிடைக்கும், ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும், படித்தவர்கள் ஆதரவு உண்டு, இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும், பிரிந்தவர் கூடுவர், வேற்றுமைகள் மறையும்.

கன்னி: வாய்வுக் கோளாறினுல் வேதனைப்படுவீர்கள், உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும், எதிரிகளின் கோழைத்தனமான நடவடிக்கைகள் உங்கள் அமைதியைக் குலைக்கும். விபத்துக்கு இடமுண்டு.

துலாம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், களஸ்திரவழியால் பொருள் வரவிற்கு இடமுண்டு, கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள், புதிய நண்பர்கள் சேருவார்கள்.

விருச்சிகம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக அமைவார்கள், மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும், தொழில் துறையில் நஷ்டம் ஏற்படலாம்.

தனு: பாக்கிய விருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும், தக்க சமயத்தில் உதவுவதற்கு தந்தை முன்வருவார், பெரிய இடத்து தொடர்பு ஒன்று இன்று ஏற்படலாம், சிறப்பானதினம்.

மகரம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு, நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள், திறமையான நடவடிக்கையின் மூலம் பண பலத்தைத் தேடிக் கொள்வீர்கள்.

கும்பம்: சந்தர்ப்பத்திற்கேற்ற வண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு, மேலிடத்து வாழ்த்தும் கிடைக்கக்கூடும்.

மீனம்: செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும், வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும், குடும்பத்தில் சிறு பிணி தோன்றும், மனத்திடம் விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# இந்து இளைஞர் மன்ற கட்டிடம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை இந்து இளைஞர் மன்றத்திற்கு 15 ஆயிரம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டு வருகின்றது. மன்ற உறுப்பினர்கள் சிரமதான மூலம் இக் கட்டடவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மல்லாகம் மாவட்டம்:

# நீதிமன்ற அலுவல்கள்: புதிய ஒழுங்குமுறை

(மாவிட்டபுரம்)

மல்லாகம் மாவட்ட நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள திரு. சி. வீ. விக்னேஸ்வரன் நீதிமன்ற அலுவலர்கள் குறித்து புதிய ஒழுங்குகளைச்செய்துள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் காலை9—15க்கு ஆரம்பமாகி பகல் 12—30க்கு மதிய போசன இடைவெளி விடப்பட்டு மீண்டும் 1—30க்கு ஆரம்பமாகி 3—30 வரை நடைபெறும். திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் பொலிஸ் வழக்குகளும், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் சிவில் வழக்கு விசாரணைகளும் புதன்கிழமைகளில் தாபரிப்பு வழக்குகள் சிவில் வழக்கு அழைப்புகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அடையாள அணிவகுப்புகள் நடத்துவதாக இருந்தால் நீதிமன்ற நடவடிக்கைகளை பாதிக்காதவிதத்தில் புதன், வெள்ளி ஆகிய நாட்களில் ஆரம்ப நீதிமன்றத்தில் நடத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற அலுவல்கள் நடைமுறைகள், தேவைகள்குறித்து அலுவலக ஊழியர்கள் சட்டத்தரணிகள் ஆகியோருடன் கலந்துரையாடி நீதிமன்ற அலுவல்களை நடத்த ஒத்துழைப்பு நல்குமாறும் புதிய நீதிபதி கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களது நன்மை கருதி வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தவும் காலதாமதங்களை தவிர்க்கவும் தாம் ஏற்பாடுகள் செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்ற அறையில் தம்மை சந்திக்கக்கூடாதென்றும், அவ்வாறு சந்திப்பது சந்தேகங்களை உண்டுபண்ணுமென்றும் தெரிவித்த அவர்; வேண்டுமானுல் வழக்காளி, எதிரி ஆகிய இருதரப்பினரும் சேர்ந்து தம்மை சந்திக்கலாமெனவும் கூறினுர்.

புதிய நீதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக சட்டத்தரணிகள் உறுதியளித்தனர்.

# "ஆசிரிய சங்க வளர்ச்சிக்கு உழைத்தவர்"

(மட்டுவில்)

"அமரர் ஆசிரியமணி வே. சுப்பையா தமிழ் ஆசிரிய சங்கத் தலைவராக இருந்த காலத்தில்தான் சங்க வரலாற்றில் ஒரு பொற்காலம் என்றும் கூறலாம். ஆசிரிய சங்கம் தொழிற் சங்க ரீதியாக இயங்கிய பெருமை அவருக்கே உரியது. அவரின் காலத்தில் ஆசிரிய சங்கம் ஆசிரியர் உரிமைகளுக்காக மட்டுமன்றி, மொழி கலை, கலாச்சாரம், பண்பு ஆகியவற்றையும் வளர்க்க திட்டமிட்டு இயங்கியது."

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சகாயநிதிச் சங்கம் அண்மையில் நடத்திய மறைந்த ஆசிரியமணி சுப்பையாவின் இரங்கற் கூட்டத்தில் சங்க செயலாளர் திரு. க. மகாசிவம் தனது இரங்கலுரையில் குறிப்பிட்டார்,

இக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. மா. இராஜலிங்கம் தலைமையில் சங்கசெயலகத்தில் நடைபெற்றது. அனுதாபப் பிரேரணை ஒன்று நிறைவேற்றி அமரர் சுப்பையா குடும்பத்தினருக்கு அனுப்பிவைப்பது என்ற தீர்மானமும் நிறைவேறியது.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கமும் ஆசிரியமணி அமரர் சுப்பையாவிற்கு ஒரு இரங்கற் கூட்டத்தை தலைவர் திரு. த. காசிநாதன் தலைமையில் நடத்தியது.

தலைவர் திரு. காசிநாதன் தமது உரையில்; 1956ல் நமது அரசியல் தலைவர்களை ஒன்று சேர்ந்து உழைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியவர் அமரர் சுப்பையா, அவர் ஆசிரிய உலகிற்குமட்டுமல்ல கூட்டுறவு அரசியல் துறைகளிலும் பெரிதும் உழைத்துள்ளார். சகல அதிகாரிகளுக்கும் அவர் தனது பங்களிப்பைத் தரத்தயங்குவதில்லை" என்ருர். பலர் உரை நிகழ்த்தினர்.

# வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்ராவும் பிரிட்டிஷ் உதவி வெளிவிவகார அமைச்சர் திரு. க்ளஸ் கோர்ட்ம் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டு விரைவில் இலங்கை வரவிருக்கிருர்கள்.

இருவாரகாலம் இலங்கையில் தங்கும் இவர்கள் ஜனாதிபதி ஜயவர்த்தனுவையும் வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள். (கு)

# சிற்றுண்டிச் சாலையில் திருட்டு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் சிற்றுண்டிச் சாலை அறையிலிருந்து 4200 ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. இந்த அறையின் கதவை உடைத்து பின்னர் யன்னலை உடைத்து மேசையின் உள்ளிருந்த பணமே திருடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து காங்கேசன்துறை பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# அமைச்சரிடம் ஆட்சேபனையை நேரில் தெரிவிப்பர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதி புன்னைக்குடாவில் மீன்பிடி அமைச்சினுல் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாதிரிக் கிராமத்திலுள்ள 100 வீடுகளையும் வெளிமாவட்ட மீன்பிடியாளர்களுக்கு வழங்குவதைத் தடைசெய்யவேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக் குழுவினரான மட்டக்களப்பு மாவட்ட மந்திரியும் பிரதி தபால் தந்தி தொலைத்தொடர்புகள் அமைச்சருமான ஜனுப் அப்துல்மஜீத், மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சீ. சம்பந்தமூர்த்தி, உள்ளூராட்சி அலுவல்கள் மந்திரி திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் ஆகியோர் நாளை புதன்கிழமை மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவைச் சந்தித்து வலியுறுத்தவிருக்கிருர்கள்.

இவ்வீடுகள் வெளிமாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்படுவதை ஆட்சேபித்து கடந்த 28ம் திகதி மாவட்ட அபிவிருத்திசபை கூட்டத்தில் அரசாங்க கட்சி உறுப்பினர்களும் இணைந்து கண்டித்திருந்தது தெரிந்ததே. (அ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன செவ்விளநீர்த் தென்னம்பிள்ளைகளும், பாவித்துக் கழித்து 45 கலன் வெற்று றம்களும் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 1894

இலங்கையிலே முதன்முதலாக ஆரம்பித்து வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் மின் கண்ணாடிச் சூளையில் Electric Glass Furnace அனுபவமுள்ள Bottle and Press Machine இயக்குநர் Bottle anb Press Machine கொப்பர் சிமினி கிளாஸ் ஊதுவதற்குரிய பபுளர், கெல்ப்பர், புளோவர் போன்றவர்கள் உடனடியாகத் தேவை. சில வெற்றிடங்களே உண்டு. உடனே முந்துங்கள். வேலைபழகுபவர்களும் (Trainees) தேவை. நேரில் வரவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 1795

### WANTED

Civil Engineers Surveyor, Asst Surveyo Bulldozer Operator' Motor Grade Operotor Road Roller Operator Dump Truck Driver, Male Office Secretary, Labourers. Female Domestic Helpers over 40 years, Shuttering Carpenters an Civil Forman Call with Bio-data Bala M Kanagalingham, Vasi Watch works, Kandappasegaram Road Opposite Shanth Cinema) Jaffna. 1887

### CLASS

Special English Classes conducted by well qualified teachers New features: Audio - Visual Aids. Team Teaching and Rapid Learning - Day and Evening and Week End Classes a Special Three Months Spoken English Course, Special Classes for I C M A students University Students and TOEFL Tests Enrolments during first week in Janu ry The Jaffna Education Centre, 22, Ramiah Chettiar La e, Jaffna (Near Shanti Theatr ) 1886

## கேள்வி விளம்பரம்

கரைதுறைபற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பின்வரும் சாக்குகளைக் கேள்விப் பத்திரமூலம் விற்பனைசெய்யத் தீர்மானித்துள்ளது. கேள்வி கோர விரும்புவோர் 16—1—82—ம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம் முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் சாக்குக் கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி கோருவோர் மீளப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/— இச் சங்கத்தில் கட்டிப் பற்றுச் சீட்டைப்பெற்றுக்கொள்ளவும். சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய காரியாலய நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் இவற்றைப் பார்வையிடலாம்

பல இனச்சாக்கு: 3000

பொதுமுகாமையாளர்

1870

### தேவை

அனுபவமும் திறமையும் வாய்ந்த ரேடியோ ரெக்னீசியன் தேவை. திறமையின் அடிப்படையில் தகுந்த சம்பளம் வழங்கப்படும். இருப்பிட வசதி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். நேரிலோ தடித மூலமோ உடன் தொடர்பு கொள்க. எலெக்றோ வொய்ஸ், 85, கண்டிறோட், கிளிநொச்சி. (1874)


## சிதம்பரத்தில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நாலாயிரம் மைல் நீளமானது. நம்மிலிருந்து ஒன்பதுகோடியே முப்பது லட்சம் மைல் தூரத்தில் நிற்கிறது. நமது பூமியிலும், வியாழன், செவ்வாய், புதன் முதலான சக கிரகங்களிலும் இருக்கும் வஸ்துக்களில் 99 சதவீதமானவை சூரியனில் எரியும் வாயு நிலையில் இருக்கிறது. அதன் வெப்பம் அளவு கடந்தது. சூரியனை பத்து லட்சம் துண்டுகளாகத் துண்டு போட்டால், ஒவ்வொரு துண்டும் பூமியிலும்பார்க்கப்பெரியதாக இருக்கும். அவ்வளவு பெரிதானது. பிரபஞ்சத்தில் உள்ள அண்டத் தொகுதிகளிலே சூரியனிலும் பார்க்கச் சிறிய வெள்ளிகளும் உண்டு. பல்லாயிரம் மடங்கு பெரிய வெள்ளிகளும் உண்டு. உதாரணமாக, திருவாதிரை நட்சத்திரத்தோடு ஒத்துப்பார்த்தால் நமது சூரியன் ஒரு புள்ளி போன்றது.

இதுகாறும் கூறியதைத்தருவது தற்கால விஞ்ஞானம். சுமார் 1500 வருஷங்களுக்கு முன் மணிவாசகப் பெருமானும் இதைக்கூறினர். "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும் அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி", "இன்னுழை கதிரின் நுண்ணணுப் புரைய", "கொட்கப் பெயர்க்கும்", "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி", "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்னும் வாசகங்களிலே முன் கூறிய விஞ்ஞானக்கருத்துக்கள் அனைத்தும் பொதிந்திருப்பதைக் காணலாம். 'நூற்றொரு' என்றது "எண்ணிறந்த" என்ற பொருளைக்கொடுக்கும்.

கி. பி. 10ம், 12ம் நூற்றுண்டளவில் சோழ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த சிந்தனைசக்தியும் திருவருளும் பெற்ற சிற்பி ஒருவன் மணிவாசகப்பெருமான் தந்த திருவாசகக் கருத்துக்களை அமைத்து சிலை வடிவில் வார்த்தான், அதுவே சிதம்பரத்தில் நாம் இன்று காணும் நடராஜர் விக்கிரகம். அதன் அழகு சௌந்தர்யத்தையும் கலைச்சிறப்புக்களையும் நான் இங்கே விபரிக்க முற்படவில்லை. அவற்றைப் பற்றி அறிஞர்கள் பலர் எழுதியிருக்கிறார்கள்: டாக்டர் ஆனந்த குமாரசுவாமி, சேர். பி. அருணசலம் ஆகியோரும் விளக்கியிருக்கிறார்கள். சாதாரண நாட்களில் அவற்றை முற்றாகப் பார்த்து அனுபவிக்கமுடியாது. மலர் மாலைகளாலும் பட்டாலும் அலங்கரித்து மறைக்கப்பட்டிருக்கும்,

திருவெம்பாவைப் பூசைகள் நடந்து, ஒன்பதாம் நாள் நள்ளிரவில் திருவாதிரை நட்சத்திரத்தின்போது எம்பெருமானுக்கும் அம்பிகைக்கும் ஆர்த்ரா அபிஷேகம் நடக்கும். அப்போது அலங்காரப் பொருட்கள் விலக்கப்பட்டு, சிற்பி வடித்த நிலையிலே திருவடிவங்களைக் காணலாம். முதலிலே நமது உள்ளத்தைக் கவருவது நடராஜ வடிவத்தின் கம்பீரத் தோற்றம், தயை பொழியும் புன்சிரிப்பு, அம்பிகையின் ஒய்யாரம் ஆகியன. சற்றுத் தாமதித்து நின்று அவதானித்தால் பிரபஞ்சத்துக்கும் அதனைப் படைத்து ஆட்டிவைக்கும் பரம்பொருளுக்கும் இருக்கும் தொடர்பைப்பற்றிய தத்துவம் பூரணமாகப் புலப்படுகிறது. மணிவாசகரின் திருவாசகங்களையும் தற்கால விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்களையும் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே எவ்வளவு தத்ரூபமாகச் சிலையிலே வடித்து வைத்திருக்கிறான் அந்தச் சிற்பி. நடராஜ வடிவம் இடது காலைத் தூக்கி மடக்கிப் பிடித்திருப்பது இடமிருந்து வலமாகச் சுழலும் குறிப்பையும், விரித்த செஞ்சடை விரிந்து பறப்பது அந்தச் சுழற்சியின் வேகத்தை எடுத்துக்காட்டும் குறிப்பையும், வலது காலை ஸ்திரமாக ஊன்றி நிற்பது தன்னைச் சூழ்ந்து சுழன்றுவரும் பிரபஞ்சத்தின் மீது தன் அருட்பார்வை செலுத்துவதற்காக தானும் சுழன்றாலும் தானே நடு வையத்திலே என்ஞான்றும் நிலையாக நிலைத்து நிற்கும் பரம்பொருள் என்பதை உணர்த்தும் குறிப்பையும், சுற்றியிருக்கும் திருவாசி வளையமானது பிரபஞ்சம் தன்னையே சூழ்ந்திருக்கிறது என்றுணர்த்தும் குறிப்பையும், அந்த வளையத்தில் பதிக்கப்பட்டிருக்கும் தீச்சுடர்கள் பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள கோடா கோடி அண்டத் தொகுதிகளை உணர்த்தும் குறிப்பையும் தந்து நம்மைப் பிரமிப்பு அடையச்செய்கிறது. தற்கால விஞ்ஞானத்திற்கு முன்னோடியாக நமது ஆன்றோர் வகுத்த இலக்கணம் போல அமைந்துள்ளது.

(நாளை முடியும்)

# இந்த ஆண்டில் உங்கள் பலன்

கே. என். நவரத்தினம்

### கடகராசி

உணர்ச்சி வசப்படும் கடக ராசியில் ஜெனித்தவர்கள் நன்மைகளும் தீமைகளும் கலந்தே அனுபவிப்பர். கால தாமதங்களால் மன வேதனை அடைவீர்கள். உங்களுக்கு ஓய்வென்பதே கிடைக்க கிரக நிலைகள் விடாது. 4ம் வீட்டில் வியாழன் தெய்வீக வணக்கத்தாலும், கிருபையாலும்எல்லா கஷ்டங்களையும் நிவர்த்தி செய்வார்; பித்தக் கோளாறுகள், இரத்த சுத்தியின்மை ஆகியவற்றால் நீங்கள் பாதிக்கப்படலாம், விஷ ஜந்துக்களால் அபாயம் உங்களை எதிர் நோக்கியுள்ளது. தொண்டை கண் சம்பந்தமான ரோகங்கள் எற்படவும் இடமுண்டு. புத்திரர்கள் வெளிநாட்டு பயணங்கள் சம்பந்தமாக உங்கள் கட்டுப்பாட்டை மீறலாம். இருந்தாலும் குடும்ப அமைதி குலையாமல் வியாழன் பாது காப்பார். உங்கள் தன நிலை செல்வாக்கான நண்பர்களாலும், சகாக்களாலும் சமாளிக்கப்படும். முதலீடுகள் நன்மையளிக்காவிட்டாலும், தூரதேசங்களால் லாபமடைவீர்கள். வீடு; காணி சம்பந்தமாக குறிப்பிட்டளவு முன்னேற்றமும் வளர்ச்சியும் காணலாம். சொந்த தொழில் செய்வோர் மிகுந்த லாபமடைவார்கள். வியாபாரிகள் லாபமடைவார்கள். உத்தியோகத்தர் நிலைமை திருப்திகரமாகவிருக்கும், பெண்களுக்கு குடும்ப அமைதி உள்ள வருடம், இருந்தாலும் பணவிஷயத்தில் சிக்கனமாக நடந்து கொண்டால் நல்லது. வயிறு கெர்ப்பப்பை கோளாறுகள் வேதனையளிக்கும். ஜூலை 23ன் பின்பு நிலைமை சீரடையலாம், மாணவர்களுக்கு ஜூலை 22 வரையும் சோம்பலும் அலுப்பும் குடிகொள்ளும். வருட பிற்பகுதி கல்வியில் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்.

இவர்களுக்கு 14.01-1982 தொடக்கம் 13-02-1982 வரையும். 14.04.1982 தொடக்கம் 14.05.1982 வரையும், 15.06.1982 தொடக்கம் 16—8—1982 வரையும், 17—09—1982 தொடக்கம், 16—10—1982 வரையும், 16—11—1982 தொடக்கம், 31—12—1981 வரையும் அதிஷ்ட காலங்களாக கருதப்படும்.

### சிங்க ராசி

சுயகௌரவத்தை விரும்பும் உங்களுக்கு செவ்வாய் சனி 2ம் இடத்தில் இருப்பதால் மிகுந்த சோதனைகள் ஏற்படும். குடும்ப அங்கத்தவர்களால் பணக் கஷ்டங்கள் ஏற்படும். கையிலிருந்த பணம் தண்ணீர் மாதிரி கரைந்து விடும்; சிறு பயணங்கள் நஷ்டங்களைக் கொண்டுவரும், சிநேகிதர்கள், அயலவர்கள், புத்திரர்கள் கரைச்சல்களை உண்டுபண்ணுவார்கள். நேத்திரம் வாய் சம்பந்தமான கோளாறுகள் தலை தூக்கும். கரும வியாதியான அஸ்மா, பீனிசம் முதலியவற்றால் வேதனையடைவீர்கள். சத்திர சிகிச்சை நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சண்டை கச்சரவுகள் குடும்ப வாழ்வை சீர்குலைக்கும். புத்திரலாபங்கள் ?நத்தை வேகத்திலேகிடைக்கும். கடன்கள் வசூலிப்பது இயலாத காரியம். ஏமாற்றங்களும் மோசடிகளும் ஜூலை மாதம் வரை நீடிக்கும். காணி, வீடு வாகனாதி சுகங்கள் சிறிதும் கிடையாது. வியாபாரிகளுக்கு முதலீடுகள் பலனளிக்காது. தொழில் முயற்சிகள் வெற்றியளிக்காது. அந்தஸ்து உயர்வுக்கும் வழியில்லை. விவாக மானவர்களில் பெண்கள் குடும்ப பிரிவினையை எதிர் நோக்குவதால் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவும். அன்புக்குரியவர்களிடமிருந்து பிரச்னைகளை எதிர்நோக்குவீர்கள். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும் ஆர்வமும் காட்டுவீர்கள். உயர்கல்விக்கு விருப்பமிருந்தாலும் கைகூட முடியாமல் வேறு காரணங்கள் தடையாயிருக்கும். கல்வித் துறையில் முன்னேற்றம் திருப்தியளிக்காது.

இவர்களுக்கு 14—01—1982 தொடக்கம் 13—03—1982 வரையும், 14—4—1982 தொடக்கம் 14—06—1982 வரையும், 17—08—1982 தொடக்கம் 16.10.1982 வரையும், 16—12—1982 தொடக்கம் 31—12—1982 வரையும் அதிஷ்டகரமாக தோன்றும்.

(தொடரும்)

## வலது குறைந்த முஸ்லிம் சிறுவனுக்கு மூன்றுசில்லு சைக்கிள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

"சமூக சேவை அமைச்சருக்கும் எனக்குமிடையே அரசியல் கருத்து வேறுபாடிருந்தாலும் பலரும் மதிக்கத்தக்க வகையில் அவர் நடந்துகொள்வதையிட்டு அவருக்கு நன்றி கூறுகின்றேன்" என்று யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கால்கள்ஊனமுற்ற ஒரு முஸ்லிம் சிறுவனுக்கு 3 சில்லுச்சைக்கிளை வழங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் ஜனுப் பாஷா மொஹிதீன் பிச்சை தலைமையில், நாவலர் வீதியிலுள்ள முஸ்லிம் வித்தியாலயத்தில் சைக்கிள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது.

ஜனுப் மொஹிதீன் பிச்சை தனது தலைமையுரையில், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன். அரசாங்கத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் ஏராளமான உதவிகளைச் செய்துள்ளார் என்றும், இப்பாடசாலையின் கட்டிட வசதிக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார் என்றும் கூறினர்.

விகிதாசாரப்படி முஸ்லிம் மக்கள் குறைவாக இருந்தாலும் ஒரு 3 சில்லு சைக்கிள் வழங்கியமைக்காக யாழ். எம். பி.யையும், சமூக சேவைப் பகுதியையும் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சமூக சேவைப்பகுதி உதவி ஆணையாளர் திரு. கே. கெங்காதரன் பேசுகையில்; வலதுகுறைந்தவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் 3 சில்லுச் சைக்கிள் வழங்குவது இதுவே முதல் தடவை என்றும். தனியார் நிறுவனங்களிடமிருந்தும். லயன்ஸ் போன்ற ஸ்தாபனங்களிடமிருந்தும் இத்தகைய உதவிகளைப் பெற்று வந்ததாகவும் குறிப்பிட்டார்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சமூகசேவை அமைச்சரோடு தொடர்பு கொண்டதன் பேரில் தான் இவ்வுதவி கிடைத்துள்ளதென்றும், குறிப்பிட்ட சமூக சேவை உதவி ஆணையாளர், அமைச்சர் மிகவும் இரக்கமுள்ளவரென்றும் பாராட்டினர்.

(மா)

## கேவலவத்தை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நீராடும்குளம் எல்லாவகையாலும் திருவருளுக்கு ஒப்பானது. இறைவனே செழுநீர்த்திரளாய் உள்ளார். ஏரி நிறைந்த நீரனையான் எங்கள் இறைவன். இறைவன் திருவருளில் தோயக் கேவலாவத்தை நீங்கிற்று. சுத்தம் சுகம் பெசிற்று. மார்கழி மாதம் திருவாதிரை நாள் மகத்தானது. ஆதிரை என்பது வானிலுள்ள பெரிய நட்சத்திரம். அது பிரகாசமுள்ளது. சிவபெருமானோடு சம்பந்தப்பட்டுத் திருவென்னும் அடைபெற்றுத் திருவாதிரையாயிற்று.

(தொடரும்)

## பெருமை பெற்ற

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகித்தது: பல ஆண்டுகளாகக் காரைநகர்ப் பாடசாலை மாணவர்களுக்குச் சைவ சமயபாடப் பரீட்சைகளை நடத்திப் பரிசில்களை வழங்கி வருகின்றது. 1978 ம் ஆண்டு மணிவாசகர்விழாவின் வெள்ளி விழாவைச் சபை வெகு விமரிசையாகக் கொண்டாடியது. விழாவிற் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்குத் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வித்துவான் எஸ். குருசாமி தேசிகர் அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

சபை மேற்கொண்ட பணிகளுள் தலையாயது 'பண்டிதமணி எஸ். அருளம்பலவனரை திருவாசகத்துக்குஉரை எழுதச் செய்தமையேயாகும். கடந்த 40 ஆண்டுகளாக 400க்கு மேற்பட்ட தலைப்புக்களில் திருவாசகச் சொற்பொழிவுகளைக் கேட்டுவந்த நுவல் திருவாசகத்தையும் காரை நகர் மக்களையும் பிரிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டு இருபத்தேழாவது மணிவாசகர் விழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 4 நாட்கள் நடைபெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. இ கனகசுந்தரம் விழாவை ஆரம்பித்துவைப்பார்.

# "கடவுளை நாம் மறந்தாலும் அவர் எம்மை நினைக்கிறார்"

## யாழ். நகரில் குருமகராஜ்ஜியின் சிஷ்யர்

(யாழ்ப்பாணம்)

''எந்த இடத்திலும் கடவுள் இருப்பார். சாமிப்படத்தை வைத்து தேங்காய் உடைக்கும் இடத்தில்தான் கடவுள் இருப்பார் என நினைக்கக்கூடாது. நாம் பெரிய வீட்டில் வசித்துக் கொண்டு இறைவனுக்கு அவ் வீட்டின் ஒரு சிறிய இடத்தை மாத்திரம் கொடுத்திருக்கிறோம். ஆனால் இறைவன் எல்லோரது இதயத்திலும் வாழவேண்டும்''

இவ்வாறு குருமகாராஜ்ஜியின் தீட்சையாளர் மகாத்மா கிருஷ்ண சுகானந்த்ஜி ஆத்மஞானத்தைப் பற்றி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அருளுரை வழங்குகையில் கூறினார்.

அவர் தமது அருளுரையில் கூறியதாவது:-

''எங்கள் முன் தோன்றிய சற்குருமார்கள் உண்மையை வெளிப்படுத்த வந்தவர்கள், இறைவன் படைப்பவன், காப்பவன், இரட்சிப்பவன் என்ற நம்பிக்கை எமக்குண்டு. உலகத்தில் உள்ள படைப்புக்களில் சிறந்தது மனிதப் படைப்பே. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொத்து சேர்க்கின்றான் பிள்ளை சந்தோஷமாக வாழ்வதற்கு. அதேபோல இறைவன் உலகத்தைப் படைத்திருக்கிறான். மனித வர்க்கம் சந்தோஷமாவதற்கு நாம் இறைவனின் பிள்ளைகள்.

''காலத்துக்குக்காலம் சற்குருமார் தோன்றுகிறார்கள். விமோசனம் அடையச் சந்தர்ப்பம் தருகிறார்கள். இந்த உண்மையை, இந்தச் சந்தோஷத்தை நாம் அடைந்தால் எம்மைச் சூழ்ந்துள்ளவர்களையும் எம்மால் சந்தோஷமாக வைத்திருக்கமுடியும்.

சமயநூல்களும் அன்பைப் பற்றிக் கூறுகின்றன. அன்பு உள்ள உள்ளத்தினால்தான் தியானம் செய்யமுடியும். கீதையிலும் கூட கிருஷ்ணர் ''நான் தான் அன்பு, நீ என்னை அனுபவிக்கலாம்'' என்று அருச்சுனனுக்குக் கூறுகின்றார். யேசுவும் தனது பக்தருக்கு 'உனக்குள்ளே தான் நீ எதையும் காண முடியும்' என்றார்.

இந்த உடம்பின் இரகசியம் என்ன? ஏன் இரு கண்கள்? எங்களைப் படைத்தவன் தந்த ஆசிதான் இது. கோபம், வெறுப்பு, பொறாமை இவை நெருப்பு. இவைகளை எமது உடம்பில் வைத்துக்கொண்டு இருக்கின்றோம். இவை எம்மைக் கெடுப்பவை. நல்ல வழிகாட்டாது. மாயை உள்ளவர்களில் இந்தக் குணம் பிடித்திருக்கும். இதை மாற்றினால் பேரின்பத்தை அடையலாம்.

''இருபத்து நான்கு மணி நேரமும் மனமானது உங்களுக்குச் செய்திதரும். இது சில வேளைகளில் உங்களை தொந்தரவுகளிலும் சிக்க வைக்கும். இந்த மனத்தை மாற்றவேண்டும். இந்த அனுபவத்தை நித்திரைக்கு அப்பால்தான் அடையமுடியும். நித்திரையாக இருக்கும் போது கடவுளை மறந்துவிடுகின்றோம். தியானத்தை மறந்துவிடுகின்றோம். ஆனால் இறைவன் நாங்கள் எந்தச் சூழலில் இருக்கும்போதும் எங்களில் கருணைகாட்டுகிறார்'' (அ)

# பிரிட்டிஷ் எம். பி. யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் எம். பி. திரு. பி ஹில் நேற்றுக்காலை பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கியபோது ஐக்கியதேசியக் கட்சிப்பிரமுகர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவருடன் இவரது பாரியாரும், யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், வடபகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் ஆகியோரும் வந்திருந்தனர்.

இவர்களை வரவேற்க யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்புச்செயலாளரும், உதவி அரசாங்கஅதிபருமான திரு. எஸ். பி. பாலசிங்கம், வடபகுதி நீர்வளச்சபை பொறியியலாளர் திரு. ரி. குணசேகரம் உட்பட பல அதிகாரிகள் சென்றிருந்தனர்.

பிரிட்டிஷ் எம். பி. திரு. ஹில்லும் பாரியாரும் காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபனம், தொண்டமனாறு, நன்னீர்ஏரித் திட்டம், புத்தூர் நிலாவரைக்குளம், அச்சுவேலி விவசாயத்திட்டம், இணுவில் அண்ணா பாம், மகாதேவா தாம்போதி போன்ற இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் மற்றும் யாழ்செயலக அதிகாரிகளும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (மா)

## இன்று மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

மணிவாசகர்விழா இன்று பிற்பகல் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆரம்பமாகிறது. விழாவை யாழ். பல்கலைக்கழகமருத்துவத்துறை தலைவர் பேராசியர் இ, கனகசுந்தரம் ஆரம்பித்து வைப்பார்,

இவ்விழாவில் திருவாசகத் திருமுறை ஊர்வலம், திருவாசகத்திருமுறை ஓதல், வரவேற்புரை ஆகியன இன்றைய நிகழ்ச்சிகளாக இடம் பெறும்,

வித்துவான் மு. சபாரத்தினம், திரு. இ. வைத்திலிங்கம், சிவஸ்ரீ வ, குகசர்மா, திரு. கே. சிவதெட்சணாமூர்த்தி ஆகியோரின் சொற்பொழிவும், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரின் ''திருவாசகம் தந்த மணிவாசகர்'' என்னும் பொருள் பற்றிய இன்னிசை விரிவுரையும் இவ்விழாவில் இன்று இடம்பெறும்.

## பாடசாலைமாணவர்களுக்கு பருவகால சீட்டுகள் 10-ம் திகதிவரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையால் பாடசாலை மாணவ, மாணவிகளுக்குப் பருவகாலச் சீட்டுக்கள் வழங்குவது இம்மாதம் 10ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 18ந் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகின்றன.

மாணவர்களின் நியாயமான நலனைக் கருத்திற்கொண்டு, யாழ். பஸ்நிலையத்தில்வைத்து பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளதாக வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)

## ஊழியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரின் இல்லத்தில் வேலை நிறுத்தம் இடம்பெற்றது. பேச்சுவார்த்தைக்கான அழைப்பு இதுவரை கிடைக்காததினால் வேலைநிறுத்தம் தொடர்ந்து நீடைபெறும் என்று ஊழியர்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தீர்வு எதுவும் ஏற்படாதவிடத்து, தொழிற்சங்கத்தின்சார்பில் ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்'' என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# தியேட்டர் மனேஜர் தாக்கப்பட்டு ரூ. 18,000 கொள்ளை!

**(நமது மட்டக்களப்பு நிருபர்)**

**தியேட்டர் மனேஜர் ஒருவர் இரும்புக்கம்பியினால் தாக்கப்பட்டு, அவரிடமிருந்த 18,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!**

இச்சம்பவம் நேற்றுக் காலை பத்து மணியளவில் மட்டக்களப்பில் நிகழ்ந்தது, தியேட்டர் மனேஜர் ஆபத்தானநிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

மட்டக்களப்பில் உள்ள சாந்தி தியேட்டரின் மனேஜர் திரு. வி. அமிர்தலிங்கம் [48 வயது], தியேட்டர் வசூலான ரூ. 18,251 சதம் 32ஐ வங்கியில் போடும்பொருட்டுத் தனது மகளுடன் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும்போது மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மனேஜரை இரும்புக்கம்பியால் தாக்கினரென்றும் இரத்தம் பீறிட்டநிலையில் அவர் கீழே விழவே மகளின் கையிலிருந்த பணப்பையைப் பறித்துக்கொண்டு அவர்கள் ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த பொலிசார் புலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## கண்ணதாசன் மணிமண்டபம்.

சென்னை, ஜன. 4

கவிஞர் கண்ணதாசனின் நினைவாககாரைக்குடியில் மணிமண்டபம் ஒன்றை அமைப்பதற்கு 8 பேர் கொண்ட குழுவொன்றை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

இக்குழு எதிர்வரும் சனிக்கிழமை கூடி மணி மண்டபத்தை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்யவுள்ளது. (வெ)

### கம்பர்மலை

## அறுவர் கொலைவழக்கு மீண்டும் விசாரணை

(நமது புலோலி நிருபர்)

கம்பர்மலை அறுவர் துப்பாக்கிச் சூட்டுக் கொலைவழக்கு, பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் முதலாம், ஐந்தாம், ஆறாம் எதிரிகள் மரணமானார்கள். இரண்டாம் மூன்றாம், நான்காம, ஏழாம் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

கொலைசெய்யப்பட்ட ஆறு பேரின் பிரேதங்களையும் பரிசோதனைசெய்த டாக்டர் லலிதகுமார், இரண்டாம், மூன்றாம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மோதிலால்நேருவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

நான்காம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். கிருஷ்ணராசா, டாக்டர் லலித்குமாரை தாம் விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்தார்.

கந்தையா நாராயணசாமி நேற்றுச் சாட்சியமளித்தார்.

பொலிஸார் தரப்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் பொன்னையா ஆஜரானார். பொலிஸாருக்கு உதவியாகச் சட்டத்தரணி எம். வேலும்மயிலும், சட்டத்தரணி ஆர். வி. இரத்தினசிங்கமும் ஆஜரானார்கள்.

### தங்கலிங்கம் கொலை வழக்கு

கம்பர்மலை தங்கலிங்கம் கொலைவழக்கு விசாரணையும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு, கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இம்மாதம் பதினேழாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றைய விசாரணையில், கந்தையா நாராயணசாமி, நாராயணசாமி அழகேஸ்வரன் ஆகியோர் ஆஜரானார்கள்.

## விதைகிழங்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் தெரிவித்தார்,

பூநகரியில் தென்னைப் பயிர்ச்செய்கைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் பத்தியதர வகுப்பினருக்கு வழங்கிய 20 ஏக்கரில் செய்கைபண்ணப்படாமல் இருக்கும் காணிகளை ரத்துச்செய்வதென்றும், இந்தக் காணிகளை 5 ஏக்கர் வீதம் எதிர்வரும் மே மாதம் பகிர்ந்து அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [மா]

## சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவரான சிவசண்முகமூர்த்தியின் சடலம் யாழ். நீதிமன்ற நீதவான் திரு. ரி. ஜோகநாதனின் உத்தரவின் பேரில் இறந்தவரது தந்தையார் இராமலிங்கம் சதாசிவத்திடம் பொலிசார் நேற்று ஒப்படைத்தனர்.

அவரது சடலம் நேற்றுக் காலை ஆஸ்பத்திரி பிரேத அறையிலிருந்து அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (மா)

## காரணம்

((1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

இயக்குநர்சபை உறுப்பினர்கள் 7 பேரில் 5 பேர் கலந்து கொண்டனர்.

வேலைக்கு வராதவர்களில் தகுந்த காரணம் எழுத்து மூலம் கொடுக்காதவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## முதலாண்டு நினைவாஞ்சலி

மல்லாகம்

**திரு. சின்னப்பா (M.S.) சுப்பிரமணியம்**

(சட்டத்தரணியும் இளைப்பாறிய கிராம நீதிமன்ற நீதிபதி)

தோற்றம்: 08—05—1904

மறைவு: 05—01—1981

எமக்கு நல்லாசிரியராகவும் நல்வழி காட்டியாகவும் விளங்கி எம்மை நல்வழிப்படுத்தியவர் இறைவனடி சேர்ந்து ஓராண்டு நிறைவு பெறும் இந்நாளில் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இதால் அஞ்சலி செலுத்துகிறோம்.

மாணவர்களும் நண்பர்களும்

(1898)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registere:d as NewsPaper. he General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.